**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender** :
**Miscellaneous** : **CC.No.2/2025**
**Preliminary Register** :
**Police Station** : **Kanathur PS**

**Deposition of witness for** **:LW10/PW6**
:

**Name** **:** செபாஸ்டியன்
**:S/o.** தேவசகாயம்

:
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025**
**(எதிரி ஆஜர்** இல்லை **, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

நான் கானத்தூரில் வசித்து வருகிறேன். நான் பழைய பொருட்கள் வாங்கும் கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் நான்காவது எதிரி முகமத் இர்ஷாத் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து சுமார் நான்கு முதல் ஐந்து வருடத்திற்கு முன்பு கானத்தூர் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். எதற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். அந்த ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய இரண்டாவது கையெழுத்து மட்டும் அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீஸ் விசாரணையின் போது கடந்த 11.12.2019 தேதி என்று மதியம் 13.00 மணியளவில் கானத்தூர் காவல் நிலையத்தில் காவல் நிலைய குற்ற எண். 477/2019 என்ற வழக்கில் எதிரி முகமது இஷாத் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த பொழுது வழக்கு சம்பந்தமாகவும் அவர் கூறிய பொருண்மைகளை தான் கேட்டதாகவும் என் முன்னிலையில் தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்து விட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பாற்ற தான் எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியவில்லை என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதிமன்றம்,
சோழிங்கநல்லூர்.